**இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் - 2021**

-----------------------------------------------------------------------------

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இயக்கச் செயற்பாடுகள் மீதான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என நான் கருதும் கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ளன.

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதுடன் சம்பந்தப்பட்ட முகாமைத்துவம் மற்றும் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினரது பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு கணக்காய்விற்கு உட்படுத்தப்படுகின்ற நிறுவனமும் அதன் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான விதத்தில் அதற்குரித்தான வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களிற்காக உரிய புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணுதல் வேண்டுமெனக் கோருகின்றது. மேற்படி சட்டத்தின் 16 (2) ஆம் பிரிவின் படி, ஏனைய கணக்காய்வு செய்யப்படுகின்ற ஒவ்வொரு நிறுவனத்தினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அவற்றின் நிதிக்கூற்றுக்களை உரிய விதிகளில் சொல்லப்பட்டவாறு அக்காலப்பகுதிக்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் இணைத்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அந்தச் சட்டத்தின் 38 (1) (ஈ) பிரிவின் படி, வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் சரியான நேரத்தில் தயாரித்துச் சமர்ப்பிக்கப்படுவதனை உறுதி செய்தல் வேண்டுமென்பதுடன், கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் வேண்டப்படுகின்றார்.

**1.2 கணக்காய்வுக்கு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கத் தவறியமை**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை என்பன நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களிற்குள் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கான பிரதிகளுடன் வரிசை அமைச்சிற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக் கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் | (i) | கூட்டுத்தாபனத்தினால் 2006 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. ஆகியவற் றின் பங்களிப்புகளை கணிப்பீடு செய்யும் போது, ஊழியர்களுக்கு செலுத்தப் பட்ட வாழ்க்கைப் படிச் | தொழில் ஆணையா ளர் நாயகத்துடன் கலந்துரையாடப்பட்டது டன் அது உள்ளகக் கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்பட்டது. | கூட்டுத்தாபனம் குறித்த சட்ட தேவை ப்பாடுகளுடன் இணங்கி யொழுக வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சட்டங்கள். | செலவுகள் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம், ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. ஆகியவற்றின் நிலுவைப் பணங்கள் மற்றும் மிகைக் கட்டணமாக முறையே ரூபா 349.79 மில்லியன் மற்றும் ரூபா 174.89 மில்லியன் செலுத்த நேரிட்டுள்ளது. எவ்வாறான போதிலும், பங்களிப்பு பணம் மற்றும் மிகைக் கட்டணங்களின் கூட்டுத்தொகையான ரூபா 524.68 மில்லியன் 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| | | (ii) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்குரிய பங்களிப்பான ரூபா 421.78 மில்லியன் மற்றும் மிகைக் கட்டணமான ரூபா 147.39 மில்லியன் குறித்த நிதியத்துக்கு இதுவரை அனுப்பிவைக்கப்படாது காணப்பட்டது. மேலும், 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செலுத்தப்படாத பங்களிப்பான ரூபா 607.62 மில்லியனானது 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறிக்கையிடப்பட்டுள்ள செலுத்தப்படாத தொகை குறித்து அதற்கான கொடுப்பனவுத் திட்டத்துடன் கூடிய கலந்துரையாடல் 2022 திசெம்பர் 06 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டதுடன் அது இடம்பெற்று வருகின்றது. | ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் விதிகளுக்கமைய பங்களிப்புகள் மற்றும் மிகைக் கட்டணங்கள் உரிய திகதியில் அனுப்பி வைக்கப் பட வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 18 ஆந் திகதிய 2020/48 ஆம் இலக்க கட்டளைகளுடனான உள்ளகக் காசோலைகள் அலுவலக சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தி | கட்டளைகளுடன் இணைத்து காசோலைகளால் முற்பணங்கள் வழங்கப்பட்டவுடன், அத்தகைய முற்பணங்கள் 30 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட முற்பண பட்டியலின் பிரகாரம், ரூபா 518.81 மில்லியன் கூட்டுத்தொகையான முற்பணங்கள் | கட்டளையுடன் கூடிய காசோலையை குறைத்து, காணப்படுகின்ற நிலுவையை ஒரு மாதத்திற்குள் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் 2023 பெப்ரவரி 02 ஆந் தேதியிட்ட பொது முகாமையாளரின் | முற்பணங்கள் உரிய காலத்தில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியதுடன், அவற்றுக்கு பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 30 நாட்களுக்கு மேலாக தீர்க்கப்படாது காணப்பட்டது. அவற்றுள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் முறையே ரூபா 11.24 மில்லியன் மற்றும் 224.84 மில்லியன் தொகைகள் ஒன்று முதல் ஐந்து வருடங்கள் மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்ப்பனவு செய்யப்படாது காணப்பட்டது. மேலும், கால அட்டவணைக் கமைய கட்டளை முற்பணங் களுடனான காசோலைகளின் கடன் மீதிகள் ரூபா 206.54 மில்லியனாக காணப்பட்டது டன், கடன் மீதிகளுக்கான காரணங்கள் கணக்காய்வுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. | 2023/07 ஆம் இலக்க சுற்றறிக்கை வெளியி டப்பட்டு நிலைமையை சமாளிக்க மாற்று ஏற்பாடுகள் அறிமுகப் படுத்தப்பட்டன. | |
| (இ) | 1979 திசெம்பர் 20 ஆந் திகதிய 122/1979 ஆம் இலக்க கட்டளைக ளுடனான உள் ளக காசோலை கள் அலுவலக சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி | பொருட்கள் மற்றும் சேவை களின் விநியோகத்திற்காக விசேட காசு முற்பணங்கள் வழங்கப்படுகின்ற போது, அந்த முற்பணங்கள் 14 நாட்களினுள் தீர்க்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், ரூபா 11.31 மில்லியனை விட அதிகமான 05 வருடங்களை கடந்த காசு முற்பணங்கள் மீளாய்வாண் டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்படாது காணப்பட்டது. | மூாத்தில் நிலுவை யாகவுள்ள தொகை யை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் காசு முற்பணங்களை உரிய காலப்பகுதியில் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2 செயலாற்றல்**

1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் அதிகாரச்சட்டத்தின் 3(2) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் முக்கிய குறிக்கோள்கள் 2008 மார்ச் 28 ஆந் திகதிய 1543 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், அவை பின்வருமாறு: (i) கட்டிடம், சிவில் இன்ஜினியரிங் மற்றும் ஏனைய பொறியியல் செயற்திட்டங்களின் புலனாய்வு, திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் நிர்மாணம் (ii) மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குதல் (iii) ஆதன அபிவிருத்தி பணிகளை பொறுப்பெற்றல் (iv) தயார்நிலை கலவை கான்கிரீட், வலுவூட்டப்பட்ட கான்கிரீட் மற்றும் முன் அழுத்தப்பட்ட கான்கிரீட் தயாரிப்புகளை உற்பத்திசெய்து விற்பனை செய்தல் (v) பொறியியல் செயற்திட்டங்கள் / நிறுவனங்களுக்குத் தேவையான கட்டுமானப் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்தல் (vi) பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல் (vii) மேற்கூறிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் கட்டுமானப் பொருட்கள், முறைகள் மற்றும் நுட்பங்கள் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்தல்.

**2.2.1** கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம், மேற்படி நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக மீளாய்வாண்டினுள் நிர்மாணப் பிரிவு, நிர்மாண கூறுகள் பிரிவு மற்றும் இயந்திர மற்றும் மின்சாரப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகள் தொடர்பிலா செயலாற்றலின் பொழிப்பு பின்வருமாறு.

| பிரிவு இல. | விபரம் | வருமானம் 2020 ரூபா மில். | வருமானம் 2021 ரூபா மில். | மாற்றம் % | செலவினம் 2020 ரூபா மில். | செலவினம் 2021 ரூபா மில். | தேறிய இலாபம் / (நட்டம்) 2020 ரூபா மில். | தேறிய இலாபம் / (நட்டம்) 2021 ரூபா மில். | மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | பிரீகாஸ்ட் யார்ட் ஏக்கல | 105.02 | 113.87 | 8.43 | 196.92 | 191.98 | (91.90) | (78.11) | 15.01 |
| 02 | பிரீகாஸ்ட் யார்ட் - ரத்மலான | 50.35 | 66.54 | 32.15 | 90.21 | 97.26 | (39.86) | (30.72) | 22.93 |
| 03 | தங்கொடுவ தச்சுத் தளம் மற்றும் மிக்ஸ் யார்ட் | 9.94 | 7.91 | 20.42 | 32.87 | 44.33 | (22.93) | (36.42) | (58.83) |
| 04 | தெமட்டகொட கொங்ரீட் வார்ப்புகள் தளம் | - | 82.33 | - | 16.78 | 88.33 | (16.78) | (6.00) | 64.24 |
| 05 | வெலிகந்த பிரீகாஸ்ட் யார்ட் | 0.02 | 1.27 | 6250 | 4.7 | 3.11 | (4.68) | (1.84) | 60.68 |
| 06 | அலுமினியம் வேலைகள் - ரத்மலான | 19.88 | 56.55 | 184.46 | 39.18 | 75.93 | (19.30) | (19.38) | (0.41) |
| 07 | பேலியகொட பிரதான வேலைத்தளம் | 21.43 | 53.16 | 148.06 | 56.07 | 49.77 | (34.64) | 3.39 | 109.79 |
| 08 | பேலியகொட செயற்பாட்டு தளம் | 7.12 | 22.40 | 214.61 | 52.83 | 61.77 | (45.71) | (39.37) | 13.87 |
| 09 | இரத்மலான வேலைத்தளம் | 6.84 | 28.80 | 321.05 | 26.16 | 52.44 | (19.32) | (23.64) | (22.36) |
| 10 | போக்குவரத்து மற்றும் லொஜிஸ்டிக் பிரிவு | 12.90 | 14.49 | 12.32 | 39.91 | 37.31 | (27.01) | (22.82) | 15.51 |
| 11 | தீயணைப்பு சேவைகள் கட்டிடத் தளம் | 5.21 | 23.60 | 352.98 | 11.57 | 22.39 | (6.36) | 1.21 | 119.02 |
| | **மொத்தம்** | **238.71** | **470.92** | **97.28** | **567.2** | **724.62** | **(328.49)** | **(253.70)** | **22.77** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **முகாமைத்துவக் கருத்துரை** | **பரிந்துரை** | |
|---|---|---|
| நிரந்தர தளங்கள் மற்றும் வேலைத்தளங்களின் செயலாற்றல் தொடர்பில் வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பில் பகுப்பாய்வு மேற்கொண்ட பின்னர், மீளாய்வாண்டில் அனைத்து தளங்களும் ரூபா 253.70 மில்லியன் கூட்டுத்தொகையான நட்டம் விளைவித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது தளங்களிடையே | மாதாந்த செயலாற்றல்களை உண்ணிப்பாக அவதானித்து இந்த நிலைமையை சீர்படுத்துவதற்கும் பணிப்பாளர் சபைக்கு அறிவிப்பதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்துள்ளது. | நட்டத்தை குறைப்பதற்கும் புதிய வியாபர சந்தர்ப்பங்களை இனங்காண்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

19.82 சதவீத முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. மேலும், இரண்டு வேலைத்தளங்கள் மாத்திரம் இலாபத்தில் இயங்கியிருந்ததுடன் ஏனையவை நட்டத்தில் இயங்கியிருந்தன.

## 2.3 கூட்டுத்தாபனத்தின் காசுப் பாய்ச்சல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் படி, செயற்பாட்டுக் காசுப் பாய்ச்சல் ரூபா 66,716,881 எதிர்மறையாகக் காணப்பட்டது. ஆகையால் எதிர்காலத்தில் கூட்டுத் தாபனம் போதியளவு இலாபத்தை ஈட்டாதிருப்பின், நிதி நிலைமை மேலும் மோசமடையும். | - | காசு முகாமைத்துவத்தி ற்கான முறையான தொழிற் படு மூலதன முகாமைத்து வம் நெருக்கமான மேற்பார் வையுடன் செயற்படுத்தப்பட வேண்டும் |

## 2.4 தேசிய உபகரண மற்றும் இயந்திரவியல் நிறுவனத்தின் செயற்பாடுகள் (NEMO) பிரிவு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் தேசிய உபகரண ங்கள் மற்றும் இயந்திர அமைப்பு (NEMO) பிரிவினால் செயல்படுத்தப் பட்ட செயற்திட்டங்களின் தகவல்க ள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | - | செயற்திட்டங்களின் துல்லி யம், முழுமை, பொருத்தம் மற்றும் திட்டங்களின் செல வினங்களுக்கான அதிகாரம் ஆகியவற்றைத் தீர்மானிப்ப தற்கு போதுமான அளவுத் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2.5 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை அரச வங்கியிடமிருந்து கடனாகப் பெற்ற ரூபா 2,100 மில்லியன் தொகை தீர்க்கப்படாதிருந்ததுடன் 2021 டிசம்பர் 31 நிலவரப்படி செலுத்த வேண்டிய வட்டி ரூபா 569 மில்லியன் ஆகும். | முகாமைத்துவம் கடனைத் தெளிவாகப் புரிந்து கொண்டு ள்ளதுடன் தெளிவுபடுத்தப்ப ட்டவாறு அதன் சேவைச் கிரயத்தை இந்த வரையறு க்கப்பட்ட செயல்பாட்டுச் சூழ்நிலைக்குள் இடமளிக்க முடியாதுள்ளது. வங்கிக் கான கடன் உட்பட நீண்ட கால பொறுப்புகளை மறுசீர மைக்க நடவடிக்கை எடுக்க ப்படுகிறது. | நட்டத்தைக் குறைத்து குறைந்தபட்ச இலாபத்தை யேனும் ஈட்ட முகாமைத துவம் தகுந்த நடவடி க்கைகளை எடுக்க வேண்டும். |
| (ஆ) ரூபா 378,234 வங்கி நிலுவைகள் 07 நடப்புக் கணக்குகளில் செயலற்றுக் காணப்படுவதுடன் 2003 யூன் | இந்த விடயத்தை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப் பட வேண்டும். |

02 ஆந் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.4 ஆம் பந்தியின் படி இந்த வங்கிக் கணக்கை தொடர்ச்சியாக பேண வேண்டிய அவசியத்தை நியாயப்படுத்த அரையாண்டுக்கு ஒருமுறை மீளாய்வு செய்து 2021 டிசம்பர் 31 இல் இந்த செயலற்ற வங்கிக் கணக்குகளை மூடிவிடுவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 2.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 10,562,151, ரூபா 1,158,194,068, ரூபா 97,745,394, ரூபா 65,211,052 மற்றும் ரூபா 2,120,553 தொகையான முறையே வருமான வரி, பெறுமதிசேர் வரி, பொருளாதார சேவைகள் கட்டணம், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் பொருட்கள் சேவைகள் வரி ஆகியவற்றை உரிய வேளையில் செலுத்தாமையால் 2014 முதல் 2020 வரை ரூபா 130,431,594 மில்லியன் ஆன மிகை அறவீடு உள்நாட்டு இறைவரித் திணைளத்தினால் விதிக்கப்பட்டிருந்தது. | அறிக்கையிடல் குறிப்பிடப்பட்டுள்ள மிகை அறவீடு மற்றும் செலுத்தாதுள்ள வரிகளை முகாமைத்துவம் இனங்கண்டுள்ளது. | நியதிச்சட்ட தேவைப்பாடுகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியொழுகுதல் வேண்டும். |

## 2.7 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மதிப்பீடு செய்யப்படாத அலுமினிய வார்ப்புகள் மற்றும் கூரைத் தகடுகளின் இருப்பு 2017 ஆம் ஆண்டிலிருந்து நெமோ இன் பிரதான களஞ்சியத்தில் பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டுள்ளன. | நெமோ மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் அதனை தெளிவுபடுத்த அறிவுறுத்தப்பட்டதுடன் இதனை சரிப்படுத்தி முகாமைத்துவத்திற்கும் கணக்காய்விற்கும் செயல் முன்னேற்றம் அறிவிக்கப்படும். | இச்சொத்துக்களை செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.8 ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டுத்தாபனத்தின் நாற்பத்தாறு (46) ஊழியர்கள் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகளின் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் வழிகாட்டலுக்கு முரணாக, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, அரசாங்க தொழிற்சாலை, மத்திய கலாச்சார நிதியம், நகர குடியமர்வு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன், கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட ரூபா 55,254,044 மில்லியன் தொகையான சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரப்படிகள் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | செலுத்திய சம்பளத்தை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் நிறுவனத் தலைவர்களின் ஊடாக திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்குவதற்கும் உரிய அரசாங்க நிறுவனங்களிடமிருந்து சம்பளத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.9 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலுள்ள ஏழு சிரேஷ்ட முகாமைத்துவ பணியிடங்கள் வெற்றிடங்களாக காணபப்பட்டன. | உயர்மட்ட உத்தியோகத்தர்களிற்கு தேவையானவிடத்து பதிற்கடமை மற்றும் கடமையை பதிலீடுசெய்தல் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. | முறையான அனுமதியுடன் அத்தியாவசிய சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திற்கு ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவின் படி, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலுள்ள பதவிகளின் அளவுக்கு மாத்திரமே ஆட்சேர்த்தல் வேண்டுமெனினும், அதற்கு முரணாக 27 பதவிகளுக்கு 345 மேலதிக ஊழியர்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் சேவை தேவைப்பாட்டின் படி தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்ரேர்ப்புச் செய்யப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 28 (ii) ஆம் இலக்க 2006 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதல் இல்லாமல் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாது. இருப்பினும், அந்த விதியைப் புறக்கணித்து, அங்கீகரிக்கப்படாத 12 பதவிகளுக்கு 14 ஊழியர்களை கூட்டுத்தாபனம் ஆட்சேர்ப்பு செய்திருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் சேவை தேவைப்பாட்டின் படி தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்ரேர்ப்புச் செய்யப்பட்டது. | ஆட்சேர்ப்பு தொடர்பான விதி மற்றும் பிரமாணங்களுடன் முகாமைத்துவம் இணங்க வேண்டும். |